भारत का राजपत्र

# The Gazette of India

இந்திய அரசிதழ்

असाधारण

**EXTRAORDINARY**

**சிறப்பிதழ்**

भाग XV अनूभाग 1

**Part XV Section 1**

பகுதி XV பிரிவு 1

प्राधिकार प्राकारित

**PUBLISHED BY AUTHORITY**

அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது

नई दिल्ली, गुरुवार, 14 अकतूबर 1999/1921 सका

New Delhi, Thursday, 14th October 1999/1921 Saka

புது தில்லி, வியாழக்கிழமை 14, அக்டோபர் 1999/1921 சக

## Ministry of Law, Justice and Company Affairs

(Legislative Department) New Delhi

சட்ட, நீதி மற்றும் நிறுமம அலுவல்கள் அமைச்சகம் (சட்டமியற்றுத் துறை), புது தில்லி

The Translation in Tamil of the Departmental Inquiries (Enforcement of Attendance of Witnesses and Production of Documents) Act, 1972 (18 of 1972), The Anti-Apartheid (United Nations Convention) Act, 1981 (48 of 1981), The Railway Property (Unlawful Prossession), Act, 1966 (29 of 1966), The Presidents Emoluments and Pension Act, 1951 (30 of 1951), The Water (Prevention and Control of Pollution) Cess Act, 1977 (36 of 1977), The Dramatic Performances Act, 1876 (19 of 1876), The Delivery of Books and Newspapers (Public Libraries) Act, 1954 (27 of 1954), The Forfeited Deposits Act, 1850 (25 of 1850), The Family Courts Act, 1984 (66 of 1984), The Seamen's Provident Fund Act, 1966 (4 of 1966), The Agricultural and Processed Food Products Export Development Authority Act, 1985 (2 of 1986), The Administrative Tribunals Act, 1985 (13 of 1985) are hereby published under the Authority of the President and shall be deemed to be the Authoritative Texts thereof in Tamil under Clause (a) of Section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973).

துறை விசாரணைகள் (சாட்சிகளை முன்னிலையாகும்படியும் ஆவணங்களை முன்னிலைப்படுத்தும்படியும் கட்டாயப்படுத்துதல்) சட்டம், 1972 (18/1972), இன ஒதுக்கல் ஒழிப்பு (ஐக்கிய நாடுகள் இணங்காறு) சட்டம், 1981 (18/1981), இருப்பூர்தியச் சொத்து (சட்ட முரணான உடைமை) சட்டம், 1966 (29/1966), குடியரசுத் தலைவரின் பதவியூதியங்கள் மற்றும் ஓய்வூதியச் சட்டம், 1951 (30/1951), நீர் (மாசுத்தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) மேல்வரிச்சட்டம், 1977 (36/1977), நாடகக்கலை நிகழ்ச்சிகள் சட்டம், 1876 (19/1876), நூல்களையும் செய்தித்தாள்களையும் வழங்குதல் (பொது நூலகங்கள்) சட்டம், 1954 (27/1954), பறிமுதல் செய்யப்பட்ட வைப்பீடுகள் சட்டம், 1850 (25/1850), குடும்ப நீதி மன்றங்கள் சட்டம், 1984 (66/1984), கடலோடிகள் வருங்கால வைப்பு நிதியச்சட்டம், 1966 (4/1966), வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருள்கள் ஏற்றுமதி வளர்ச்சி அதிகார அமைப்புச் சட்டம், 1985 (2/1986) நிருவாகப்பணித் தீர்ப்பாயங்கள் சட்டம், 1985, (13/1985), ஆகியவற்றின் தமிழ் மொழிபெயர்ப்பு குடியரசுத் தலைவரின் அதிகாரத்தின்படி இதன்மூலம் வெளியிடப்படுகின்றன. அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச்சட்டங்கள்) சட்டம், 1973 (50/1973)இன் பிரிவு 2இன் கூறு (அ)வின்படி இவையே தமிழில் அதிகாரவுரிமைப்படியான வாசகங்களாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

[Price Rs. 71.00]

# பறிமுதல் செய்யப்பட்ட வைப்பீடுகள் சட்டம், 1850

## (சட்ட எண்25/1850)

*[1850, ஜூன், 14]*

ஒழுங்குமுறைப்படுத்தும் சட்டம், 1819 (8/1819) இன்படி முற்றுப்பெறாத நில விற்பனைகளின் மீது செய்யப்பட்ட வைப்பீடுகளை அரசாங்கத்திற்கென பறிமுதல் செய்வதற்கான ஒரு சட்டம்.

### முகப்புரை

குத்தகை நிலுவைகளுக்கான நில விற்பனையின்போது, பறிமுதல் செய்யப்பட்ட வைப்பீடுகள், அவை கொள்விலைத் தொகையாக இருந்ததைப் போன்று பயன்படுத்தப்படுதல் வேண்டும் என்ற வங்காளத் தொகுப்புச் சட்டம், 1819இன் ஒழுங்குமுறைப்படுத்தும் சட்டம், 8இன் பிரிவு 9லுள்ள வகையத்தை மரபுவழி நிலமேலாளர்கள் (Patridars) தங்களுக்கு மோசடியாகப் பயன்படுத்திக் கொள்வதால், பின்வருமாறு சட்டம் இயற்றப்படுகிறது:—

1. [நீக்கறவு செய்தல் சட்டம், 1870இன் (14/1870) 1இனால் நீக்கறவுகள் மற்றும் இணைப்புப்பட்டியலின் பகுதி IIIஇனால் நீக்கறவு செய்யப்பட்டது.] நீக்கறவுகள்.

2. அவ்வாறு பறிமுதல் செய்யப்பட்ட வைப்பீடு எதுவும், விற்பனைக்கான செலவுகளைக் கொடுத்துத் தீர்ப்பதற்குப் பயன்படுத்தப்படுதல் வேண்டும், மற்றும் மிகையாய் இருப்பது அரசாங்கத்திற்கென பறிமுதல் செய்யப்படுதல் வேண்டும். பறிமுதல் செய்யப்பட்ட வைப்பீடுகளைப் பயன்படுத்துதல்.